www.StudyGuideIndia.com

**4310**

Register Number | | | | | |

## பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

## Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : 3 × 4 = 12

1. தமிழ்மொழியின் மீது பற்றுக்கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற் கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம் ?

2. நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாக ஆசிரியர் பரிதிமாற் கலைஞர் கூறுவன யாவை ?

3. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு. வி. க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

4. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை ?

5. நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

[ Turn over

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : 3 × 4 = 12

6. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம் ?

7. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

8. செல்வம் நிலைபேறு உடையதன்று என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது ?

9. தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு. வ. உரைப்பனவற்றை விளக்குக.

10. தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : 1 × 6 = 6

11. கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ். வையாபுரியார் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் கட்டுரை வடிவில் தருக.

12. தமிழர்க்கு ஆவொடு தொன்று தொட்ட தொடர்பு உண்டு என்பதனைப் பாவாணர் கருத்துகள் வழியே நிறுவுக.

www.StudyGuideIndia.com

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : 2 × 10 = 20

13. *'சட்டை'* அல்லது *'மகன்'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'வேலி'* அல்லது *'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து'* என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'பழிக்குப்பழி'* அல்லது *'கிழிசல்'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

வெளிநாட்டிலிருந்து திரும்பிய சின்னத்தாய் கிராமத்து மக்களின் மனதை தெளிவடைய வைத்து உயர்த்தியதைப் போன்ற ஒரு கற்பனைக்கதை வரைக.

*அல்லது*

உல்லாசப் பயணம் சென்ற உங்கள் பள்ளி மாணவர்கள் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட, உன் மதிநுட்பத்தால் அவர்களைக் காத்தமை போன்று ஒரு கற்பனைக்கதை வரைக.

[ Turn over

www.StudyGuideIndia.com

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்
கன்னலடா என் சிற்றூர் என்போன் உள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம் !
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்பு றுத்தல்.

– பாரதிதாசனார்

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.**

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Eat to live and do not live to eat.

17. Penny wise pound foolish.

18. Art is long and life is short.

19. Hunger breaks stone walls.

20. Stolen waters are sweet.

21. To the good people world appears good.

www.StudyGuideIndia.com

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றனை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) ''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை''

ஆ) ''அனுபவமே சிறந்த ஆசான்''

இ) ''பார்க்காத பயிரும் கேட்காத கடனும் பாழ்''

*அல்லது*

*'மழை'* அல்லது *'வெண்ணிலா'* என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை பத்து வரிகளுக்குள் எழுதுக.

*குறிப்பு :* காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலாக பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உகந்த விடையை எழுதுக.
5 × 2 = 10

தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறப்பது. அறிஞர் கிரிபத் அயர்லாந்து தேசபக்தர். அயிரிஷ் மொழியில் புலவர். அயிரிஷ் மொழி மூலம் போராட்டம் நடத்தி தம் தாய்நாட்டு விடுதலையைப் பெற்றார். கவி மன்னராகிய இரவீந்திர நாதர் கீதாஞ்சலி என்னும் உலகம் போற்றும் நூலைத் தம் தாய்மொழியாகிய வங்க மொழியிலன்றோ எழுதினார். பின்னர் அதனை ஆங்கிலத்தில் மொழி



www.StudyGuideIndia.com

பெயர்த்தார். கல்விக் கடல் என்று போற்றப்பெற்ற பால கங்காதர திலகர், ஆங்கிலேயரே வியக்குமளவு ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். அவர் சிறைக் கோட்டத்தில் கீதா ரகசியம் என்னும் ஒரு நூலை இயற்றினார். எம்மொழியில் ? தம் தாய் மொழியாகிய மகராஷ்டிரத்திலன்றோ ?

அண்ணல் காந்தியடிகள் ஆங்கில மொழியில் சிறந்த புலமை பெற்றவர். அவரது ஆங்கிலம் ஆங்கிலேயராலேயே போற்றப்படுகிறது. அவர்தம் சுயசரிதையை எம்மொழியில் எழுதினார் ? தாய் மொழியாம் கூர்ஜரத்தில் அன்றோ ? ஆங்கிலம் பயின்ற இக்காலத் தமிழன் ஒருவன், ஒரு துறையில் பெரியனாய்த் தன் வரலாற்றைத் தான் எழுதும் வாய்ப்புநேருமேல் அதைத் தாய்மொழியாம் தமிழில் எழுதப்புகுவனோ ? அல்லது ஆங்கிலத்தில் எழுதப்புகுவனோ ?

*வினாக்கள் :*

16. அறிஞர் கிரிபத் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

17. கீதாஞ்சலி என்னும் நூலை இயற்றியவர் யார் ?

18. கல்விக்கடல் என்று போற்றப்பட்டவர் யார் ?

19. பால கங்காதர திலகர் இயற்றிய நூலின் பெயர் என்ன ?

20. காந்தியடிகள் தன் சுயசரிதையை எந்த மொழியில் எழுதினார் ?

www.StudyGuideIndia.com

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : $10 \times 1 = 10$

23. இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும், ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. ஸ்கூல் ஃபர்ஸ்ட் பெல் அடிச்சாச்சி. நான் லேட்டா போறேன்.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

26. காட்ல ஆந்தை பாட, கூகை கூவ, காகம் கத்தியது.

( மரபுவழூஉச் சொற்களை நீக்கித் திருத்தமாக எழுதுக )

27. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான். அறிந்துச் சொல் எனக்கு.

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

28. நெள் வயழில் கலை பரித்த போது அறவு கடித்தது

( எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக )

29. 'தலை' - 'தளை' *அல்லது* 'கரி' - 'கறி'

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

[ Turn over

www.StudyGuideIndia.com

30. கொடுத்த சேதியைக் கோவையாப் பேசு.

( கொச்சையான வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக. )

31. வேதாரண்யம் : தர்ம சம்வர்த்தனி

( நல்ல தமிழில் எழுதுக )

32. இன்னதுதான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல என்று ஜான்சன் பதில் கூறினார்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).

www.StudyGuideIndia.com